**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.8** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சந்தோஷ்குமார் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.02.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். பிளம்பராக வேலைசெய்கிறேன். வழக்கு எதிரிகளை தெரியும். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டனை தெரியும். 08.06.2020ம் தேதிகாலையில் கொலை நடந்தது எனக்கு தெரிந்தது. தெருவில் சொல்லி தெரியும். போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 07.06.2020ம் தேதி நான், முகமது ஈசாக், ராஜா, முகமது சித்திக், கருணாநிதி, வீரமணிகண்டன் ஆகியோர்கள் BC Hostel உள்ளே சீட்டு ஆடிகொண்டிருந்தோம் என்று போலிசார் விசாரைணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது ஆனந்த் (எ) முருகானந்தம், பார்த்தா (எ) பார்த்திபன், டால்டாகண்ணன், அய்யனார் ஆகியோர்கள் அய்யனார் மோட்டார்சைக்கிளை ஓட்ட மற்றவர்கள் அதே மோட்டார்சைக்கிளில் வந்ததாக போலிசார் விசாரணையின் போது சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது

ஆனந்த (எ) முருகானந்தம் வீரமணிகண்டனை பார்த்து ஏண்டா டிஸ்பிளை போன செல்லை கொடுத்துவிட்டாய் என்று தேவுடியா பயலே என்று திட்டினார் என்றால் சரிதான். வேறசெல்லும் மாற்றி தரமாட்டிகிறாய், பணமும் தரமாட்டிங்கிறாய் என்று சொல்லி அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், அப்போது வீரமணிகண்டன் பணமும் தரமுடியாது, செல்லும் தரமுடியாது, உன்னால் ஆனதை பார்த்துகொள் என்று சொன்னார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது பார்த்தா (எ) பார்த்திபன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வீரமணிகண்டனின் தலையின் பின்பக்கம் வெட்டினார் என்றும், வீரமணிகண்டன் ஓடி காம்போண்ட் சுவரை தாண்டும்போது அந்த அரிவாளை வாங்கி டால்டாகண்ணன் தலையில் வெட்டியதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. வீரமணிகண்டன் காம்போண்ட் ஏறி குதித்தபின்னர் முருகானந்தம் (எ) ஆனந்த் கையில் வைத்திருந்த பட்டா கத்தியால் அவருடைய கழுத்தை அறுத்தார் என்று போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. கழுத்தை அறுத்த பின்னர் அய்யனார் மோட்டார்சைக்கிளை எடுத்து சென்றுவிட்டார் என்றும், மற்ற 3பேர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் நாங்கள் சத்தம்போட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்காக வீரமணிகண்டனை தூக்கிபார்க்கும்போது அவருக்கு உயிர் இல்லை என்று தெரிந்தது என்றும், அதற்குள் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு நீண்ட நாட்களாக பழக்கம் என்றும், நாங்கள் ஒரே பகுதியில் வசிக்கிறோம் என்றும், எதிரிகள் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.